

கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (08.09.2024) நடைபெற்ற கழக ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்தில் காணொலிக் காட்சி வாயிலாகப் பங்கேற்றார். இதுகுறித்து முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், **“திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்டதன் 75ஆம் ஆண்டு நிறைவு விழா, முப்பெரும் விழா ஏற்பாடுகள், ஒருங்கிணைப்புக் குழுவின் அடுத்தகட்டப் பணிகள் குறித்து ஆலோசித்தோம்”** என்று குறிப்பிட்டுள்ளார். இக்கூட்டத்தில் அமைச்சர்களும்–ஒருங்கிணைப்புக் குழுவின் உறுப்பினர்களுமான கே.என். நேரு, எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம் காட்பாடி தெற்கு ஒன்றிய திமுக பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசினார்.அருகில்மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வி.தயாநிதி, ஒன்றியக் குழு தலைவர் வேல்முருகன், ஒன்றிய கழக செயலாளர் கருணாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### பல கனவுகளில் வாழ்பவர்கள்

# காழ்ப்புணர்ச்சியின் காரணமாக முதல்வரை விமர்சிக்கிறார்கள்!

## சிவகங்கையில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!

சிவகங்கை. செப். 10-

சிவகங்கை மாவட்டத்தில் பல்வேறு திருமண நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக வருகை புரிந்த கனிமொழி கருணாநிதி எம்.பி. ஒக்கூரில் செய்தியாளர்களிடம் கூறியதாவது.

விளம்பரத்திற்காகவும், முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழகம் பின்தங்கி உள்ளதாக பா.ம.க. தலைவர் அன்புமணி ராம்தாஸ் குற்றச்சாட்டு கூறி உள்ளார்.

இதற்கு கனிமொழி கருணாநிதி எம்.பி.கூறியதாவது:-

நடக்க முடியாத, நிறைவேறாத பல கனவுகளை வைத்திருப்பவர்கள் முதல்வர் மீது உள்ள காழ்ப்புணர்ச்சியினால் விமர்சனம் செய்து வருகிறார்கள்.



முதல்வராக தளபதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பு ஏற்ற மூன்று ஆண்டுகளில் பல்வேறு முதலீடுகளை வெளிநாடுகளுக்கு சென்று ஈர்த்துள்ளார்.

தற்போது அமெரிக்கா சென்று பல முன்னணி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளார். அனைத்துத் துறைகளிலும் தமிழகம் முன்னேறிய மாநிலமாக திகழ்ந்து வருகிறது. இதை பொறுத்துக் கொள்ள முடியாத பா.ம.க .தலைவர் அன்புமணி ராமதாஸ் மற்றும் சிலர் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக தவறான கருத்துக்களை கூறி வருகிறார்கள். இது மக்களிடம் எடுபடாது.

இவ்வாறு கனிமொழி எம்.பி. கூறினார்.

பேட்டியின் போது கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் ஆகியோர் உடன் இருந்தார்கள்.

முன்னதாக மதுரையில் இருந்து கார் மூலம் சிவகங்கை வருகை தந்த கனிமொழி கருணாநிதி எம்.பி.க்கு மாவட்டக் கழக செயலாளர் - அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் முன்னிலை யில் திருமதி தமிழரசிரவிக்குமார் எம் .எல். ஏ .மாவட்ட கழக துணைச் செயலாளர் தா. சேங்கை மாறன் ,சிவகங்கை நகர் கழக செயலாளர் நகர் மன்ற தலைவர் சி.எம்.துரை.ஆனந்த், மாவட்ட ஆதிதிராவிடர் நலக் குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, தெற்கு ஒன்றிய செயலாளர் எம். ஜெயராமன் தலைமையில் கழக நிர்வாகிகள், மகளிர் அணியினர் வரவேற்றார்கள்.

### மாவட்டம் முழுவதும் தி.மு.க. பவளவிழா - முப்பெரும் விழாவை சிறப்பாகக் கொண்டாடுவீர்

# சென்னை முப்பெரும் விழாவில் திரளாகப் பங்கேற்க வேண்டும்!

## இராணிப்பேட்டை மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆர்.காந்தி வேண்டுகோள்!

இராணிப்பேட்டை, செப். 10-

கழக பவளவிழா - முப்பெரும் விழாவை சிறப்பாக கொண்டாட வேண்டும் என்றும் சென்னையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் திரளாகப் பங்கேற்க வேண்டும் என்றும் மாவட்டக் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்து மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர். காந்தி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

செப்டம்பர் 15 முப்பெரும் விழா, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் பிறந்தநாள், தமிழர்க்கான இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய நாள் செப்டம்பர் 17.

சமுதாயநலன் காக்க, சமதர்மம் நிலைக்க, உயர்ந்தோர், தாழ்ந்தோர் எனும் நிலைமாற, அறிஞர் அண்ணா, தந்தை பெரியார் வழியில் கழகம் காத்த பெருந்தகை முத்தமிழ் அறிஞர் கலைஞர் கழகம் எனும் ஆலமரம் போல் பகுதறிவுச் சோலையாக



பூத்து குலுங்கும் சூழலை உருவாக்கிட கடந்து வந்த பாதைகளில் சந்தித்த சோதனைகள், வேதனைகள் கழக வரலாற்றை தொகுத்து, இன்றைய தலைமுறை அறிய திராவிட பாசறை கூட்டங்கள் தமிழகமெங்கும் இன்றைய இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வை உண்டாக்க திராவிட கருத்துகள் பதிய கழக தலைவர் - தமிழக முதல்வர் தளபதி அவர்களும் , இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் ஆற்றும் அரும்பணி என்றும் திராவிடம் மறையாது, மறைக்கப்படாது, விதைத்தது வீறு கொண்டு எழும். எனவே திராவிட மாடல் ஆட்சி காணும் கழக தலைவர் எண்ணமும் செயலும் எதிர்கால தி.மு.கவிற்கான கலங்கரை விளக்கமாக தமிழக முதல்வர் தளபதி அவர்கள் போற்றும் தலைவர் தி.மு.கழகத்தின் முதுபெருந்தலைவர் பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாள் செப்டம்பர் 15. அன்று நமது மாவட்டத்திலுள்ள அனைத்து நகர, ஒன்றிய, பேரூர் மற்றும் ஊர்கிளை, உட்கிளை, வார்டு கிளைகள் தோறும் பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைகளுக்கும் திருவுருவப் படங்களுக்கும் மாலை அணிவித்து, கழக கொடியேற்றி இனிப்பு வழங்கி சிறப்பாக கொண்டாடுமாறும், பவள விழாவை முன்னிட்டு அனைவரது இல்லங்கள் கழக அலுவலகங்களில் கழக கொடியேற்றி கொண்டாடுவோம். வீதிகள் தோறும் பறக்கும் இரு வண்ண கொடி நம் வீடுகள் தோறும் பறந்திட வேண்டும்.

எனவே மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, செயலாளர்கள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, இலக்கியஅணி, தொண்டரணி, வழக்கறிஞரணி, வர்த்தகரணி, நெசவாளரணி, ஆதிதிராவிட நலக்குழு, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, மருத்துவரணி, பொறியாளரணி, விவசாயத் தொழிலாளரணி, மகளிர் தொண்டரணி, கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மற்றும் தகவல் தொழில் நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணியினர், தொ.மு.ச விளையாட்டு மேம்பாட்டு அணி, ஓட்டுநர் அணி, அயலக அணி உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் அவரவர் பகுதிகளில் நிகழ்ச்சிகள் சிறப்பாக ஏற்பாடு செய்தும் மற்றும் செப்டம்பர் 17 மாலை 04.00 மணிக்கு சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெறும் பவள விழா முப்பெரும்விழாவில் ஆயிரக்கணக்கானோர் கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

